**கேரளத்தில் தொடங்கியது தென்மேற்கு பருவ மழை**

First Published : 01 Jun 2010 12:00:00 AM IST

புது தில்லி, மே 31: கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவ மழை தொடங்கி விட்டதாகவும் எனினும் நாட்டின் உள்பகுதிகளில் பருவ மழை தொடங்க சிறிது கால தாமதம் ஏற்படும் எனவும் இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இது குறித்து தில்லி வானிலை ஆய்வு மைய இயக்குநர் அஜித் தியாகி செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பது: "தென்மேற்கு பருவமழை கேரளத்தில் தொடங்கிவிட்டது. கர்நாடக மாநிலத்தில் இது இன்னும் ஓரிரு நாள்களில் தொடங்கும்.

அரபிக்கடலில் காற்று வீசத் தொடங்கியுள்ளது. இதனால் மேற்கு கடற்கரைப் பகுதி மாநிலங்கள் முழுவதிலும் சீரான தென் மேற்கு பருவ மழை இருக்கும். தற்போது அரபிக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் ஒன்று உருவாகியுள்ளது. இது மேலும் வலுவடைந்து புயலாக மாறக்கூடும்.

இதனால் குஜராத் மாநிலம் மற்றும் பாகிஸ்தானின் கராச்சி பகுதிகள் பாதிக்கப்படக்கூடும். தற்போது மேற்கு கடற்கரைப் பகுதியில் காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் நாட்டின் உள்பகுதிகளில் மழை பொழிவு ஏற்பட சிறிது கால தாமதம் ஏற்படும்' என்றார்.

தென் மேற்கு பருவ மழை ஜூன்-1 ல் தொடங்கும் என சென்ற மாதம் வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது. தற்போது அது ஒரு நாள் முன்னதாகவே தொடங்கியுள்ளது. இதனால் கேரள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விவசாயம் பெருமளவு நடைபெறும் கேரள மாநிலத்தில் 4 மாதங்கள் தென்மேற்கு பருவ மழை நீடிக்கும்.

இந்த ஆண்டு சீரான பருவ மழை இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் வேளாண் உற்பத்தி அதிகரித்து பணவீக்கமும் விலைவாசியும் குறையக்கூடும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

**பொருளாதார வளர்ச்சி 7.4%**

First Published : 01 Jun 2010 12:00:00 AM IST

புது தில்லி, மே 31: நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த நிதி ஆண்டில் (2009-10) 7.4 சதவீதமாக உயர்ந்துள்ளது. உற்பத்தித் துறையில் இரட்டை இலக்க வளர்ச்சி எட்டப்பட்டதால் பொருளாதார வளர்ச்சி அதிகரித்துள்ளது.
கடந்த நிதி ஆண்டின் நான்காம் காலாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.6 சதவீதமாக உயர்ந்தது. இதே காலகட்டத்தில் உற்பத்தித் துறை வளர்ச்சி 16.3 சதவீதமாக உயர்ந்தது. இதே காலகட்டத்தில் சீனாவின் பொருளாதார வளர்ச்சி 11.9 சதவீதத்தை எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.
சர்வதேச தேக்க நிலை காரணமாக 2008-09-ம் நிதி ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.7 சதவீதமாகக் குறைந்தது. அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து 9 சதவீத வளர்ச்சியை எட்டியது குறிப்பிடத்தக்கது.
தேக்க நிலையைப் போக்க அரசு அளித்த வரிச் சலுகையின் பலனாக உற்பத்தித் துறை கணிசமான வளர்ச்சியை எட்டியுள்ளது தெளிவாகப் புலனாகியுள்ளது. உற்பத்தி வரி, சுங்க வரே, சேவை வரி உள்ளிட்டவற்றை அரசு குறைத்தது. இதனால் இத்துறை கடந்த நிதி ஆண்டில் 10.8 சதவீத வளர்ச்சியை எட்டியது. முந்தைய நிதி ஆண்டில் இத்துறை வளர்ச்சி 3.2 சதவீதமாக இருந்தது.
பொருளாதார வளர்ச்சி கடந்த நிதி ஆண்டில் 7.4 சதவீதமாக உயர்ந்துள்ளதால், வரும் நிதி ஆண்டில் வளர்ச்சி விகிதம் 8.5 சதவீதத்தை எட்டும் என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான அறிக்கை வெளியானதும் பங்குச் சந்தையில் ஏறுமுகம் காணப்பட்டது.

தினமலர்

**சிறுபனையூரில் டிரான்ஸ்பார்மர் பழுது: 200 ஏக்கர் கரும்பு பயிர்கள் கருகும் அபாயம்**

திருக்கோவிலூர் : திருக்கோவிலூர் அடுத்த சிறுபனையூர் கிராமத்தில் டிரான்ஸ்பார்மர் பழுதடைந்ததால் 200 ஏக்கர் பரப்பளவிலான கரும்பு பயிர் காய்ந்து வருகிறது.

திருக்கோவிலூர் அடுத்த சிறுபனையூர் கிராமத்தில் டிரான்ஸ்பார்மர் 3 மாதத்திற்கு முன் பழுதடைந்தது. இதற்கு பதில் 100 கே.வி., திறன் கொண்ட பழைய டிரான்ஸ்பார்மர் பொருத்தப்பட்டது. இதன் மூலம் 34 மின் மோட்டார்கள் இயக்கப்பட்டன. இதனால் குறைந்தழுத்த மின் வினியோகம் வழங்கப்பட்டது. இதனை 200 கே.வி., டிரான்ஸ்பார்மராக மாற்ற வேண்டும் என விவசாயிகள் மின் துறை அதிகாரிகளுக்கு கோரிக்கை வைத்தனர். அதிகாரிகளின் அலட்சியத்தால் லோட் தாங்காமல் டிரான்ஸ்பார் மீண்டும் பழுதடைந்தது. கடந்த 27 நாட்களாக டிரான்ஸ் பார்மர் மாற்றாமல் உள்ளது. இதனால் 200 ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டுள்ள கரும்பு பயிர் கருகி, காயும் நிலை ஏற்பட்டுள்ளது. மின் துறை உயர் அதிகாரிகளை சந்தித்து மனு கொடுக்கும் போதெல்லாம் காலம் தாழ்த்தினர். பின்னர் நேற்று டெம்போவை எடுத்து வரச் சொல்லியுள்ளனர். இதனை நம்பி 1000 ரூபாய் செலவு செய்து மினிடெம்போவுடன் டிரான்ஸ்பார்மரை எடுக்க விழுப்புரம் சென்ற விவசாயிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் தற்போது தான் பதிவு செய்துள்ளோம். சீனியாரிட்டி அடிப்படையில் டிரான்ஸ்பார்மர் வரும் என கூறி விட்டனர். பல லட்சம் ரூபாய் வட்டிக்கு கடன்வாங்கி பயிர் செய்த விவசாயிகள், அதிகாரிகளின் திடீர் அறிவிப்பை கேட்டு திகைத்துப்போய் உள்ளனர்.

**வெலிங்டன் ஏரி வண்டல் மண்: விவசாயிகளுக்கு வழங்க கோரிக்கை**

விருத்தாசலம் : வெலிங்டன் ஏரியில் உள்ள வண்டல் மண்ணை விவசாயத்திற்கு இலவசமாக வழங்கக் கோரி விவசாய சங்க கூட்டமைப்பு முதல்வருக்கு கோரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து விவசாய சங்க கூட்டமைப்பின் மாவட்ட செயலாளர் கார்மாங் குடி வெங்கடேசன் முதல்வர் கருணாநிதிக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனு: திட்டக்குடி வட்டம் இடைசெருவாய் கிராமத்தில் மிகப்பெரிய வெலிங்டன் ஏரி உள்ளது. இந்த ஏரி மூலம் 45 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெருகிறது. கடந்த 25 ஆண்டுகளாக வெலிங்டன் ஏரி தூர் வாரப்படாமல் வண்டல் மண் படிந்துள்ளது. இதனால் ஏரியின் நீர்பிடிப்பு பகுதியின் உயரம் குறைந்தும், எரியின் கரை வலுவிழந்தும் உள்ளதால் கடந்த 10 ஆண்டுகளாக முழு அளவு தண்ணீர் தேக்க முடியவில்லை. இதனால் கார் மாங்குடி, சத்தியவாடி, கருவேப்பிலங்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 3 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்காத நிலை உள்ளது. எனவே ஏரியின் உட்புறத்தில் உள்ள வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக எடுத்து செல்ல அனுமதிக்க வேண்டும். இதனால் ஏரியின் ஆழம் அதிகரித்து நீர் பிடிப்பு அதிகரிக்கும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

**மானிய கடன் உதவி வழங்கல்**

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் சமூக பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வங்கி மானிய கடன் மற்றும் செவிலியர் மாணவிகளுக்கு

சான்றிதழ்களையும், கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.
சமூக பொருளாதார மேற்பாட்டு திட்டத்தின் கீழ் 76 பயனாளிகளுக்கு தலா 15,000 ரூபாய் வீதம் மொத்தம் 11 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் கடன் உதவிகளை கலெக்டர் அமுதா வழங்கினார். இக்கடனில் 50 சதவீதம் மானியமாகும். மேலும் ஓம் சக்தி செவிலியர் பயிற்சி கல்லூரி மாணவிகளுக்கு ஊக்கத்தொகையாக தலா 2,800 ரூபாய் வீதம் 30 மாணவிகளுக்கு வழங்கினார்.

கலெக்டர் அமுதா பேசும்போது,""தர்மபுரி மாவட்டத்துக்கு சமூக பொருளாதார திட்டத்தின் கீழ் அரசு 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு கடந்த மூன்றாண்டாக கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுக்கு 500 முதல் 750 பேர்களுக்கு கடன் வழங்கப்படுகிறது. பயனாளிகள் கடனை உரிய தவணையில் செலுத்தி வங்கியுடன் நல்லுரவை வளர்ச்சி மேலும் கடன் உதவிகள் பெற்று முன்னேற்றம் அடைய வேண்டும்," என்றார். திட்ட இயக்குனர் ரவிச்சந்திரன், இந்தியன் வங்கி உதவி பொது மேலாளர் சடகோபன், நபார்டு வங்கி உதவி மேலாளர் மோயிசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் சங்கத்தினர் உண்ணாவிரதம்**

திருச்சி: திருச்சியில் தமிழக விவசாயிகள் சங்கம், அரசியல் கட்சிகள் சார்பில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரத போராட்டம் நடந்தது. தமிழக விவசாயிகள் சங்கம், அனைத்துக் கட்சிகள் சார்பில், ராம்ஜிநகர் தேசியப் பஞ்சாலை தொழிலாளர் கட்டட சங்கம் முன் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. தமிழக விவசாயிகள் சங்கம் மாவட்ட அமைப்பாளர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். அந்தநல்லூர் ஒன்றிய அமைப்பாளர் சின்னத்துரை தலைமை வகித்தார். புங்கனூர் பஞ்சாயத்து தலைவர் பாக்கியராஜ் முன்னிலை வகித்தார். அ.தி.மு.க., மாநகர் மாவட்ட செயலாளர் மனோகர், ஸ்ரீரங்கம் தொகுதி எம்.எல்.ஏ., பரஞ்சோதி, முன்னாள் அமைச்சர் பாலசுப்பரமணியன் உள்பட பலர் பேசினர்.

"திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், மணிகண்டம் பஞ்சாயத்து, கொத்தமங்கலம், கள்ளிக்குடி, புங்கனூர் ஏரிகளில் சாலை அமைப்பதை தடைவிதித்து சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் பேரில் அமைக்கப்பட்ட வல்லுனர் குழு அறிக்கை சமர்பிக்காதபட்சத்தில், சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை மீறி கடந்த ஏப்ரல் 15ம் தேதி சாலை பணியை துவக்கிய தேசிய நெடுஞ்சாலை என்.ஹெச்.,-67 அதிகாரிகள், துணைபோன மாவட்ட உயரதிகாரிகளை கண்டித்தும், நீதிமன்ற உத்தரவை முறையாக அமல்படுத்த வேண்டும்.

தாயனூர், புங்கனூர், கள்ளிக்குடி பகுதி நெடுமலை கல்குவாரிகளை முறையாக ஏலத்துக்கு கொண்டுவராமல் தாமதப்படுத்தும் அதிகாரிகளை கண்டித்தும், கூலித்தொழிலாளிகள் பயனடைய உடனடியாக ஏலத்துக்கு கொண்டுவர வேண்டும். ராம்ஜிநகர் ஸ்ரீஉமாபரமேஸ்வரி பஞ்சுமில் நூற்பாலையை மூடிய நிர்வாகத்தை கண்டித்தும், மூடிய நூற்பாலையை அரசு எடுத்து நடத்த வேண்டும்' போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் நடந்தது. அ.தி.மு.க., கம்யூனிஸ்ட், புதியதமிழகம், பகுஜன் சமாஜ் கட்சி உள்ளிட்ட கட்சிகள் கலந்து கொண்டன. தமிழக விவசாயிகள் சங்க மணிகண்டம் ஒன்றிய தலைவர் ஆரோக்கியசாமி நன்றி கூறினார்.

**விலை உயர்வால் சந்தையில் காய்கறி வாங்க ஆளில்லை**

ஈரோடு: நேதாஜி மார்க்கெட்டில் காய்கறி விலை உயர்வால்,பொதுமக்கள் கூட்டமின்றி வியாபாரிகள் விரக்தியடைந்தனர். எப்போதும் கூட்டம் நிறைந்திருக்கும் ஈரோடு நேதாஜி தினசரி காய்கறி மார்க்கெட்டில், நேற்று தக்காளியை தவிர மற்ற காய்கறியின் விலையில் அதிகபட்ச மாற்றம் இல்லை. சென்ற வாரத்தை காட்டிலும் ஒரு ரூபாய் கூடவும், குறைந்தும் விலை காணப்பட்டது. நேற்று முன்தினம் இரவு பெய்த மழையால், மார்க்கெட்டின் பல இடங்களில் ஆங்காங்கே சகதியாய் காட்சியளித்தது. மார்க்கெட்டுக்கு காய்கறி வாங்க வந்தவர்களை விட விலை கேட்க வந்தவர்கள் அதிகமாக இருக்கும். தேவை அதிகமாக இருந்தபொழுதும், காய்கறிகள் வாங்க ஆளில்லாமல் வியாபாரிகள் சிலர ஓய்வெடுத்து கொண்டிருந்தனர். எப்போதும் பிஸியாக இருக்கும் வியாபாரிகள் கூட, விற்பனையில் மந்தம் ஏற்பட்டதால் சோக ஜாடையில் இருந்தனர். காரணம், ஆந்திராவில் ஏற்பட்ட கலவரமும், கோடை காலத்தில் உயர்ந்து நிற்கும் விலை ஏற்றமும்தான் காரணம் என்கின்றனர். நேற்றைய மார்க்கெட்டில், முட்டை கோஸ் கிலோ 15 ரூபாய், நூர்கோல் 25, பீட்ரூட் 20, உருளைக்கிழங்கு 15, முள்ளங்கி 20, பீன்ஸ் 40, பழைய இஞ்சி 70, புதிய இஞ்சி 40 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கத்தரிக்காய் 16, புடலங்காய் 18, சேனைக்கிழங்கு 30, கேரட் 40, சுரைக்காய் ஒன்று 5, முருங்கைக்காய் 20 ரூபாய்க்கு என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டது. தக்காளியைப் பொறுத்தவரை, காலையில் மார்க்கெட் துவங்கத்திலிருந்து 32 ரூபாயிலிருந்து விலை துவங்கியது. காய்கறி வியாபாரி ஹக்கீம் கூறியதாவது: காய்கறி தேவை அதிகமாக இருக்கிறது என்பதால், அதிகளவில் வாங்கி குவிக்கிறோம். ஆனால், காய்கறியின் விலை ஏற்றம், விற்பனையை பாதிக்கிறது. கோடை ௦லம் என்பதால், ஓரளவுக்கு காய்கறி விற்பனையில் மந்தமாக இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**பவானிசாகர், மேட்டூர் கைவிரிப்பு; குடிநீர் விநியோகத்தில் சிரமம்**

ஈரோடு: பவானிசாகர், மேட்டூர் அணைகளில் போதிய நீர்வரத்து இல்லாமல் தொடர்ந்து நீர்மட்டம் சரிந்து வருவதால், ஈரோட்டில் காவிரியாறு வறண்டு குட்டைபோல ஓடுவதால், கடும் குடிநீர் பஞ்சம் ஏற்படும் அபாயநிலை உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் தொடர்ந்து போதிய பருவமழை பெய்யாமல் பொய்த்து வருகிறது. சென்றாண்டு கேரளா மற்றும் நீலகிரி மலைப்பகுதியில் பெய்த பருவமழையால் பவானிசாகர் அணை 96 அடியை எட்டியது. அதன் பின் அணைக்கு குறிப்பிடும்படியாக நீர்வரத்து இல்லை. பாசனத்துக்கு வாய்க்கால் மற்றும் குடிநீருக்காக அணையிலிருந்து தண்ணீர் தொடர்ந்து திறக்கப்பட்டதால், நீர்மட்டம் வெகுவாக சரிந்தது. தற்போது பவானிசாகர் அணையில், தண்ணீர் வற்றி குட்டை போல காட்சியளிக்கிறது. இதுபோல், மேட்டூர் அணையிலும் நீர்மட்டம் குறைந்து வருகிறது. டெல்டா பாசனத்துக்கு குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் திறக்க முடியுமா என்பதிலும் சிக்கல் எழுந்துள்ளது. தென் மேற்கு பருவமழை போதிய அளவு பெய்தால் மட்டுமே, இரண்டு அணைகளில் இருந்தும், பாசனத்துக்கும், குடிநீருக்கும் தண்ணீர் திறக்க முடியும்.

ஈரோடு காவிரியாற்றில், தற்போது நீர்வரத்து குறைந்து, ஆற்றின் நடுவே ஓடைபோல தண்ணீர் செல்கிறது. அதுவும், சாய, தோல் பட்டறைகளில் திறந்து விடப்படும் கழிவுநீர் கலந்து, கறுப்பு நிறத்தில் செல்கிறது. இதனால், குடிநீர் திட்டங்களுக்கு ஆற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதில், பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. கழிவுநீரை பல முறை சுத்திகரித்தும், ரசாயன கழிவுகளால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க குளோரின் கலந்து விநியோகிக்கப்படுகிறது. தற்போது ஈரோடு காவிரியாறு வறண்டு, பாறைகளாக காட்சியளிக்கிறது.

**விவசாயத்துக்கு மும்முனை மின்சாரம் கூடுதல் நேரம் வழங்கக் கோரி மனு**

தஞ்சாவூர்: விவசாயத்துக்கு மும்முனை மின்சாரம் கூடுதல் நேரம் வழங்கக்கோரி பல்வேறு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் கலெக்டர் அலுவலகத்தில் மனுக்கொடுத்தனர். தஞ்சை மாவட்டம் திருவையாறு தாலுகா அள்ளூர், அரசக்குடி, அம்பதுமேல்நகரம், கடமங்குடி, கழுமங்கலம், அம்மையகரம், தென்பெரம்பூர், வெள்ளாம்பெரம்பூர், களர்பட்டி, உமையவள்ஆற்காடு போன்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த குறைதீர் கூட்டத்தில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) ரெத்தினசாமியிடம் மனுக்கொடுத்தனர்.

அம்மனுவில் கூறியதாவது: எங்கள் பகுதியில் குறுவை சாகுபடிக்கு நாற்றுவிட்டு நடவுக்கு தயார் நிலையில் உள்ளோம். ஆனால், போதுமான நேரம் மும்முனை மின்சாரம் கிடைக்காததால் விவசாயம் செய்ய இயலவில்லை. எனவே, விவசாயத்துக்கு வீரமரசன்பேட்டை துணை

மின்நிலையத்தில் இருந்து சித்திரக்குடி பிரிவு வழியாக எங்கள் பகுதிக்கு தற்போது ஏழு மணி நேரத்துக்கும் குறைவாக மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. இந்த நேரம் விவசாயத்துக்கு போதுமானதாக இல்லை.

பம்புசெட்கள் முழுமையாக இயங்கவும், நாற்று மற்றும் நடவு வயல்களை தயார் செய்யவும் 20 மணி நேரம் தடையின்றி மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். இப்போது, 20 மணி நேரம் மின்சாரம் வழங்கினால், நாற்று, நடவு, பயிர் விளைச்சல் ஒரு நிலைக்கு எட்டும் நிலையில் பருவமழையில் இருந்து தப்பி சிறந்த சாகுபடியை மேற்கொள்ள முடியும். மேட்டூர் அணை திறக்கப்படும்போது குறைந்த அளவு நீரை மட்டும் பயன்படுத்தும் சூழல் ஏற்படும். இதை விரைவாக செயல்படுத்த வேண்டும், என மனுவில் கோரினர்.

**தமிழகம், கேரளாவில் முட்டை விலை 272 காசு**

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை 272 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டை உற்பத்தி மற்றும் மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து 270 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை விலை 2 காசு உயர்த்தி 272 காசாக நிர்ணயிக்கப்பட்டது. முட்டை விலை உயர்வால் கோழிப் பண்ணையாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விபரம்: ஹைதராபாத் 224 காசு, விஜயவாடா, தனுகு 220 காசு, சென்னை 271 காசு, மைசூர் 265 காசு, பெங்களூர் 260 காசு, மும்பை 248 காசு, டில்லி 230 காசு, பார்வாலா 216, கோல்கத்தா 242 காசு. நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக்கோழி விலை 1 ரூபாய் உயர்த்தி 48 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், கறிக்கோழி விலை 61 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

**பெண் விவசாயிகளுக்கு கிராம அடிப்படை பயிற்சி**

நாமக்கல்: நாமக்கல் உழவர் பயிற்சி நிலையத்தில் பெண் விவசாயிகளுக்கு கிராம அடிப்படை பயிற்சி நடந்தது. உழவர் பயிற்சி நிலைய வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணியம் பயிற்சி முகாமை துவக்கி வைத்து, பயிர் காப்பீடு, மண் மற்றும் பாசன நீர் ஆய்வு, தோட்டக்கலை துறை மான்ய திட்டங்கள், கால்நடை பராமரிப்பு, விதைச் சான்று நடைமுறை, உயர் உர விதை நேர்த்தி செய்தல் உள்ளிட்டவை குறித்து விளக்கி பேசினர். வேளாண் பயிர் காப்பீடு திட்ட ஒருங்கிணைப்பாளர் கணபதி, வேளாண் அலுவலர் ஜெயக்குமார், வீரமணி உட்பட பலர் பங்கேற்றனர்.

**."ரெடிமேட்' மாவு விலை உயர்வு**

சிவகங்கை: வெளி சந்தையில் உளுந்து விலை உயர்வை காரணம் காட்டி, "ரெடிமேட்' மாவு விலை, 12 ரூபாயில் இருந்து, 15 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சிவகங்கையில் மாவு பாக்கெட் விற்பனை அமோகமாக நடக்கிறது. கடந்த ஆறு மாதத்திற்கு முன், ஒரு கிலோ மாவு பாக்கெட் 10 ரூபாய்க்கு விற்றனர். உளுந்தம் பருப்பு விலை உயர்வு என்ற அடிப்படையில், மாவு விலையும் அதிகரித்தது.

தொடர்ந்து உளுந்து விலை ஏறுமுகமாகி வருவதால், மாவு விலையும் 12 ரூபாயாக உயர்ந்தது. தற்போது, மேலும் மூன்று ரூபாய் அதிகரித்துள்ளது. இதனால், மாவு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.மாவு தயாரிப்புக்கு, ரேஷன் அரிசி தான் பயன்படுத்தப்படுகிறது. இதில், உளுந்து சேர்த்து 15 ரூபாய்க்கு விற்கின்றனர். அதிக லாபம் கிடைப்பதால், இத்தொழிலில் போட்டியும் அதிகரித்துள்ளது. கடத்தல்: சில ரேஷன் கடை ஊழியர்கள், ஒரு ரூபாய் அரிசியை, மாவு விற்பனையாளர்களிடம் 5 ரூபாய்க்கு விற்கின்றனர். உளுந்தும் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. இதனால், அரிரி, உளுந்து கடத்தல் அமோகமாக நடக்கிறது. ரேஷன் பொருள் கடத்தலை, அதிகாரிகள் தடுக்க வேண்டும்.

**அதிக இறால் வரத்து : மீனவர்கள் மகிழ்ச்சி**

மண்டபம் : மீன்பிடி தடைக்காலம் முடிந்து, கடலுக்கு சென்ற மீனவர்களுக்கு, 80 கிலோ முதல் 150 கிலோ வரை இறால் கிடைத்துள்ளதால் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தடை காலம் முடிந்து, நேற்று முன்தினம் இரவு மண்டபம் பகுதி மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். திரும்பிய படகுகளுக்கு, தலா 100 கிலோ முதல் 150 கிலோ வரை இறால் கிடைத்தது. அதிக அளவு இறால் வரத்து இருந்ததால், சில விசைப்படகுகள் கரை திரும்பியதும், இறால்களை உரிமையாளரிடம் கொடுத்தபின், மீண்டும் உடனே கடலுக்கு சென்றனர். அதிக அளவு இறால் வரத்தால், மீனவர்களும் மகிழ்ச்சியில் உள்ளனர். இறால் கிலோ 300 முதல் 400 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

**விவசாய தொழிலாளர்கள் பற்றாக்குறையால் பாதிப்பு**

தேவாரம்: தேவாரம் பகுதியில் விவசாய கூலி தொழிலா ளர்கள் பற்றாக்குறை காரணமாக காய்கறி சாகுபடி பரப்பு குறைந்து விட்டது. தேவாரம், கோம்பை, பண்ணைப்புரம், புலிக்குத்தி, சிந்தலைச்சேரி, அய்யம்பட்டி பகுதியில் 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல் காய்கறி சாகுபடி நடந்தது. இப்பகுதியில் விளையும் காய்கறிகளை விற்பனை செய்ய தேவாரத்தில் 40 கடைகள் உள்ள கமிஷன் மண்டி செயல் படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் கூலி ஆட்கள் பற்றாக்குறை காரணமாக விவசாயிகள் காய்கறி சாகுபடி பரப்பை குறைத்து விட்டனர். இதனால் மார்க் கெட்டிற்கு வரும் காய்கறி அளவு 20 சதவீதமாக குறைந்து விட்டது. இதனால் பெரும்பாலான கடைகள் விற்பனையின்றி உள்ளன. கமிஷன் கடைக்காரர்கள் கூறியதாவது; விவசாய பணியாளர்களின் கூலி உயர்வு காரணமாகவும், தட்டுப்பாடு காரணமாகவும் பெரும்பாலான விவசாயிகள் கப்பைக்கிழங்கு, தென்னை சாகுபடியில் ஈடுபடுகின்றனர். தேவாரம் பகுதி முழுக்க கப்பை கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. அய்யம்பட்டி, சிந்தலைச்சேரி பகுதியில் மட்டும் காய்கறி சாகுபடி நடக்கிறது. சீசன் நேரத்தில் நாளொன்றுக்கு 2 லட்சம் கிலோவிற்கு மேல் இருந்த காய்கறி வரத்து தற்போது சில ஆயிரம் கிலோவாக குறைந்து விட்டது. இந்த தொழிலை நம்பியுள்ள நூறுக்கும் மேற்பட்ட குடும் பத்தினருக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது என்றனர்.

**சூறாவளிக் காற்று : 10,000 வாழை சேதம்**



சிவகாசி : சிவகாசி அருகே வீசிய சூறாவளிக்காற்றால் 10,000 வாழை மரங்கள் ஒடிந்து சேதமடைந்தன. நடுவப்பட்டி, சாமிநத்தம், நாகலாபுரம், ஈஞ்சார், மாரனேரி, மங்கலம் ஆகிய பகுதிகளில் நூற்றுக்கணக் கான ஏக்கரில் வாழை பயிரிடப் பட்டுள்ளது. இப்பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை சூறாவளிக் காற்றுடன் மழை பெய்தது. இதில் பத்து முதல் 15 நாளில்

அறுவடைக்கு தயாராக இருந்த 10,000 வாழை மரங்கள் ஒடிந்தும், வேரோடு சாய்ந்தும் சேதமடைந்தன. இதனால் விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர்.

**வெளிமாநில மையங்களுக்கு இணையாக தமிழக மையங்களில் பட்டுக்கூடு கொள்முதல்**

உடுமலை : வெளிமாநில மையங்களுக்கு இணையாக தமிழக கொள்முதல் மையங்களில் பட்டுக்கூடுக ளுக்கு விலை கிடைக்கிறது. இத னால், உற்பத்தியாளர்கள் வெளி மாநிலங்களுக்கு கூடுகளை விற் பனைக்காக கொண்டு செல்வது பல மடங்கு குறைந்துள்ளது.

உடுமலை மற்றும் சுற்றுப் பகுதிகளில் நாள்தோறும் சராசரி யாக ஒரு டன் பட்டுக்கூடுகள் உற் பத்தியாகின்றன. பட்டுக்கூடு களை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றும் "ரீலிங்' மற்றும் "வீவிங்', தொழிற்சாலை கள் தமிழகத்தில் அதிகளவு இல்லை. இதனால், பட்டு கூடுகளுக்கான விற்பனை சந்தை பிரச்னையாகவே இருந்து வந்தது. கர்நாடகா ராம்நகர் சந்தையில் அதிகளவு ரீலர்கள் பங்கேற்ப தால் கூடுகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது. உடுமலை உற்பத் தியாளர்கள் பலர் ஒருங் கிணைந்து சரக்கு வாகனங்கள் மூலம் கூடுகளை அம்மையத் திற்கு எடுத்து செல்கின்றனர். கூடுகளை கொண்டு செல்லும் போது மொழி பிரச்னை, வாடகை, வரி மற்றும் செக் போஸ்ட்களில் கட்டாய வசூல் உட்பட பல பிரச்னைகள் ஏற் படுகிறது.

மாநில பட்டு வளர்ச்சி துறை சார்பில் கோவை, தர்மபுரி, பெண்ணாகரத்தில் இயங்கும் மையங்களில்,போதிய "ரீலர்'கள் வராததால் விலை கிடைக்காத நிலை இருந்தது. இந்நிலையில், விற்பனை சந்தை பிரச்னைக்கு தீர்வு காண பட்டு வளர்ச்சி துறை ஆணையர் உத்தரவு அடிப்படையில் தமிழக கொள்முதல் மையங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ரீலர்கள் மற்றும் உற்பத்தியா ளர்களை வரவழைக்க விழிப் புணர்வு பணிகள் மேற்கொள்ளப் பட்டன. கர்நாடகா ராம்நகர் சந்தை நிலவரத்தை அடிப்படை யாக கொண்டு கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட்டது. தமிழகத்தில் இயங்கும் ரீலிங் தொழிற்சாலை மற்றும் இதர தேவைக்கான கூடுகளை தமிழக மையங்களிலேயே கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட் டது. இதனால், கோவை, பெண் ணாகரம், தர்மபுரி மையங்களில் கூடுகளுக்கு நல்ல விலை கிடைத் தது. கர்நாடகா மையத்திற்கு, தமிழக மைய விலைக்கும் அதிக பட்சமாக 20 ரூபாய் அளவே வித்தியாசம் நிலவுகிறது. ஒரு கிலோ கூட்டிற்கு சராசரியாக 250 ரூபாய் வரை கோவை உட்பட தமிழக மையங்களில் விலை கிடைக்கிறது. தற்போது, உடுமலை மற்றும் சுற்றுப்பகுதியிலிருந்து மாதத் திற்கு 30 டன் வெண்பட்டுக் கூடுகள் பெண்ணாகரம் மையத் தில் விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது.

இது குறித்து பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குநர் பன்னீர் செல்வம் கூறியதாவது: வெளி மாநிலங்களுக்கு வெண்பட்டுக் கூடுகளை விற்பனைக்காக கொண்டு செல்லும் போது உற் பத்தியாளர்கள் பல்வேறு பிரச் னைகளை சந்தித்து வந்தனர். தற் போது, தமிழக மையங்களி

லேயே கூடுகளை விற்பனை செய்ய உற்பத்தியாளர்கள் ஆர் வம் காட்டுகின்றனர். உடுமலை பகுதி கூடுகள் தரமாக இருப் பதால் தொழிற்சாலை நிர்வாகத் தினர் நேரடியாக கொள்முதல் செய்ய வரத்துவங்கியுள்ளனர். கர் நாடகா மாநிலத்திற்கு இணை யாக தமிழக மையங்களிலும் விலை கிடைப்பதால் உற்பத்தியாளர்களின் விற் பனை சந்தை பிரச்னைக்கு தீர்வு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

**நூல் விலை கிலோவுக்கு ரூ.21 உயர்வு? திக்... திக்... மனதுடன் உற்பத்தியாளர்கள்**

திருப்பூர் : இன்று வெளியாகும் நூல் விலை பட்டியலில், காட்டன் ஒசைரி நூல் விலை கிலோவுக்கு 21 ரூபாய் வரை உயரும் வாய்ப்பு உள்ளது. இதனால், பனியன் தொழில் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக உற்பத்தியாளர்கள் அலறுகின்றனர்.

ஒவ்வொரு சீசன் துவக்கத்திலும், அதிகப்படியான ஆர்டர்களைக் கவர்ந்து, வர்த்தகத்தைப் பெருக்குவதில், பனியன் உற்பத்தியாளர்கள் அதிக கவனம் செலுத்தி வந்த காலம் மாறிவிட்டது. மாதம் ஒரு முறை விலை நிர்ணயம் என்ற நிலைப்பாடு முற்றிலும் மாறி, வாரா வாரம் நூல் விலை உயர்வு ஏற்படுவதால், அனைவரது கவனமும் நூல் விலையை கண்காணிப்பதில் தொடர்கிறது. பனியன் துணி உற்பத்திக்கு பயன்படுத்தும் காட்டன் ஒசைரி நூலுக்கு ஏற்பட்டுள்ள (செயற்கை) தட்டுப்பாட்டால், விலையும் கணிக்க முடியாத அளவிற்கு உயர்ந்து வருகிறது. பனியன் தொழிலில் கரை கண்ட அனுபவசாலிகளும் இன்று அலறி ஓடும் அளவிற்கு நூல் விலை உயர்ந்துள்ளது.

கடந்த மார்ச் மாத நிலவரப்படி, ஒரு கேண்டி(356 கிலோ) பஞ்சு 28 ஆயிரம் ரூபாய்க்கு விற்றது. பருத்தி நூல் கிலோ (30, 34ம் நம்பர் நூல்கள்) 165, 167 ரூபாய் என்ற விலைகளில் விற்றன. உச்சகட்டமாக கடந்த ஏப்., 1ம் தேதி கிலோவுக்கு 17 ரூபாய் வரை உயர்ந்ததை, ஏற்றுமதியாளர்கள் உள்ளிட்ட எவராலும் ஜீரணிக்க முடியவில்லை. நூல் ஏற்றுமதிக்கு தடை விதிப்பதைத் தவிர, மத்திய அரசு நிதானமாக யோசித்து பார்த்து நடவடிக்கை எடுத்தது. இருப்பினும், நூல் விலையில் 1 சதவீதத்தைக் கூட குறைக்க முடியவில்லை. இதனால், நூற்பாலைகளிடம் பேசி பணிய வைத்தது; கடந்த மாதம் 3ம் தேதி, கிலோவுக்கு ஐந்து ரூபாய் வரை விலை குறைந்தது. இதன்படி, 20ம் நம்பர் 151 ரூபாய்; 24ம் நம்பர் 157 ரூபாய்; 30ம் நம்பர் 164 ரூபாய்; 34ம் நம்பர் 171 ரூபாய்; 40ம் நம்பர் 176 ரூபாய் என்ற விலைக்கு கிடைத்தது.

வற்புறுத்தலுக்கு பணிந்த நூற்பாலைகள், 10 நாட்களில் விலை குறைப்பை வாபஸ் பெற்று, மீண்டும் பழைய விலைக்கு விற்றன. அதற்கு பிறகும் நிலைமை சீராகாததால், மூன்றாவது வாரத்தில் மீண்டும் கிலோவுக்கு 10 ரூபாய் வரை விலை உயர்ந்தது. பருத்தி கையிருப்பு கரைந்துபோயுள்ள வேளையில், மீண்டும் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சம் ஏற்பட்டது.

அறிவிப்பு அரசல் புரசலாக வெளியாகியதில் இருந்தே பருத்தி விலை மேலும் மேலும் உயர்ந்தது. கடந்த மே முதல் வார நிலவரப்படி, ஒரு கேண்டி பஞ்சு 27 ஆயிரத்து 700 ரூபாய்க்கு விற்றது. காட்டன் ஒசைரி நூல் கிலோ 176 மற்றும் 177 ரூபாய்க்கு விற்றது. பருத்தி ஏற்றுமதிக்கு, "லைசென்ஸ்' என்ற தகவல் பரவியதைத் தொடர்ந்து, பஞ்சு விலை 29 ஆயிரத்து 700 ரூபாயாக எகிறியுள்ளது. கடந்த மாத பருத்தி விலையில் இது 7.22 சதவீத உயர்வாகும். தற்போது ஒரு கிலோ நூல் விலை 185 ரூபாயாக உயர்ந்துள்ளது; உயர்த்தப்பட்ட விலையை கைமேல் கொடுத்தாலும், தேவையான நூல் கிடைப்பதில்லை. வாரா வாரம் உயர்த்தப்பட்ட விலை உயர்வை கணக்கிட்டு பார்க்கும் போது, கணிசமான அளவு நூல் விலை உயர்வது உறுதி. கடந்த ஆண்டில் இருந்து தற்போது வரையில், கிலோவுக்கு 60 ரூபாய் அளவிற்கு நூல் விலை உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

## *நடப்பு 2010–11 பருவத்தில் நாட்டின் கரும்பு உற்பத்தி 30 கோடி டன்னாக உயரும்*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*

*நடப்பு 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் நம் நாட்டில் கரும்பு உற்பத்தி 30 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் 27.40 கோடி டன்னாக இருந்தது.*

*10 சதவீதம் உயரும்*

*ஆக, நடப்பு பருவத்தில் கரும்பு உற்பத்தி 10 சதவீதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது என கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. சென்ற பருவத்தில் கரும்புக்கு நல்ல விலை கிடைத்துள்ளது. இதனால் விவசாயிகள் உற்சாகமடைந்து கரும்பு பயிரிடும் பரப்பளவை அதிகரித்து வருகின்றனர். இதனால் கரும்பு விளைச்சல் அதிகரித்து வருவதாக இவ்வமைப்பு கூறியுள்ளது.*

*நடப்பு ஆண்டில், மே மாதம் 28–ந் தேதி வரை விவசாயிகள் சுமார் 43 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்துள்ளனர். இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 41 லட்சம் ஹெக்டேராக இருந்தது. நம் நாட்டில் பொதுவாக கரும்பு ஆண்டு முழுவதும் பயிர் செய்யப்படுகிறது.*

*கரும்பு என்பது ஒரு நீண்ட கால பயிராகும். இது, தென் மாநிலங்களில் ஜனவரி, பிப்ரவரி, ஜூலை, ஆகஸ்டு ஆகிய மாதங்களில் பயிரிடப்படுகிறது. வட மாநிலங்களில் பிப்ரவரி, மார்ச், அக்டோபர் மற்றும் நவம்பர் ஆகிய மாதங்களில் பயிர் செய்யப்படுகிறது. அறுவடைப் பணிகள் அக்டோபர்–செப்டம்பர் மாத காலத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.*

*நம் நாட்டில் உத்தரபிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய இரண்டு மாநிலங்கள் கரும்பு உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றன. இந்த இரண்டு மாநிலங்களிலும் ஒரு ஹெக்டேர் வாயிலாக உற்பத்திய செய்யப்படும் கரும்பு 55 டன்னிலிருந்து 65 டன்னாக அதிகரித்துள்ளது என கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பின் நிர்வாக இயக்குனர் வினய் குமார் தெரிவித்தார். பருவமழை நன்கு இருக்கும் பட்சத்தில் 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் சர்க்கரை உற்பத்தி 2.40 கோடி டன்னாக அதிகரிக்கும் என அவர் மேலும் கூறினார். சென்ற ஆண்டு பருவத்தில் சர்க்கரை உற்பத்தி 1.85 கோடி டன்னாக இருந்தது.*

*பிரேசில்–இந்தியா*

*உலக அளவில் கரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தியில் பிரேசில் நாடு முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன. எனினும் சர்க்கரை பயன்பாட்டில் இந்தியாவே முதலிடத்தில் உள்ளது. அக்டோபர் மாதத்தில் தொடங்கிய புதிய சர்க்கரை பருவத்தில், சர்வதேச அளவில் உபரியாக 25 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியா, மெக்சிகோ மற்றும் சில ஆப்பிரிக்க நாடுகளில் உற்பத்தி அதிகரித்து வருவதே இதற்கு காரணமாகும்.*

## *சென்ற நிதி ஆண்டில் சிறப்பான முன்னேற்றம் பொருளாதார வளர்ச்சி 7.4%–ஆக உயர்வு*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், பொருளாதார வளர்ச்சியை எடுத்துக் காட்டும் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.4 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதற்கு தயாரிப்புத் துறையில் ஏற்பட்டுள்ள இரட்டை இலக்க வளர்ச்சியே காரணமாகும்.*

*நான்காவது காலாண்டில்...*

*சென்ற நிதி ஆண்டின் நான்காவது காலாண்டில் நம்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.6 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த தகவல்களை மத்திய புள்ளியியல் துறை வெளியிட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி குறிந்த புள்ளி விவரங்கள் நன்றாக இருந்ததையடுத்து, திங்கள் கிழமை அன்று பங்கு வர்த்தகத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டது.*

*சென்ற ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை கணக்கிடுவதில் 26.8 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள தொழில் துறை உற்பத்தியில் இரட்டை இலக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் தான் மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில் பொருளாதார வளர்ச்சி, நிபுணர்களின் எதிர்பார்ப்புகளையும் விஞ்சி அதிகரித்துள்ளது.*

*இக்காலாண்டில் தயாரிப்புத்துறை, சுரங்கத் துறை உற்பத்தியில் முறையே 16.3 சதவீதம் மற்றும் 14 சதவீதம் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. சேவை அளிப்பு துறையின் வளர்ச்சி 8.4 சதவீதமாக உயர்ந்துள்ளது. வேளாண் துறை உற்பத்தி 0.7 சதவீதம் மட்டும் அதிகரித்துள்ளது.*

*முன்னேற்றப் பாதை*

*பொருளாதாரத்தை மீண்டும் முன்னேற்றப் பாதைக்கு கொண்டு வரும் வகையில், மத்திய அரசு பல்வேறு ஊக்குவிப்பு சலுகைகளை வழங்கியது. இதனையடுத்து சென்ற*

*நிதி ஆண்டில் முதல் காலாண்டில் 6.1 சதவீதமாக இருந்த, பொருளாதார வளர்ச்சி, இரண்டாவது காலாண்டில் 7.9 சதவீதமாக உயர்ந்தது. மூன்றாவது காலாண்டிலும் இந்த வளர்ச்சி 6.5 சதவீதமாக இருந்தது.*

## **வெளிநாடுகளின் போட்டிகளை எதிர்கொண்டு எகிப்துக்கான தேயிலை ஏற்றுமதியை உயர்த்த இந்திய நிறுவனங்கள் திட்டம்**

*சுதானுகா கோசல்*
*கொல்கத்தா*
*நடப்பு ஆண்டில் எகிப்து நாட்டுக்கான தேயிலை ஏற்றுமதியை அதிகரிக்க இந்திய நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன. அந்நாடு ஆண்டுதோறும் சுமார் 8 கோடி கிலோ தேயிலையை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வருகிறது. இதில் நம் நாட்டின் பங்களிப்பு 1.70 கோடி கிலோவாக உள்ளது. அதே சமயம், கென்யா நாட்டின் பங்களிப்பு 6 கோடி கிலோவாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தேயிலை ஏற்றுமதியில் இந்தியாவுக்கு போட்டியாக கென்யா, சீனா, இந்தோனேஷியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உள்ளன.*

*முக்கிய ரகங்கள்*

*நம் நாட்டில் சி.டி.சி. மற்றும் ஆர்தோடக்ஸ் ஆகிய இரண்டு முக்கிய தேயிலை ரகங்களே பிரதானமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. சி.டி.சி. ரக தேயிலையை, நம் நாடு அதிக அளவில் எகிப்து, பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. உயர்தர ஆர்தோடக்ஸ் தேயிலை ஈராக், ஈரான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தேயிலை ஏற்றுமதியில் முன்னணி நாடுகளுள் ஒன்றாக உள்ளபோதிலும், நம் நாடு இதர நாடுகளின் போட்டியை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது.*

*இந்தியா, சி.டி.சி. ரக தேயிலை ஏற்றுமதியில், கென்யா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளின் போட்டியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆர்தோடக்ஸ் ரக தேயிலை ஏற்றுமதியில் இலங்கை, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் போட்டியை ஏற்படுத்தியுள்ளன.*

*தேநீரின் நன்மைகளை உணர்த்தும் வகையில் தேயிலை வாரியம் உள்நாட்டில் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என தேயிலை வாரியத்தின் தலைவர் பாசுதேப் பானர்ஜி கூறினார். தற்போது நம் நாட்டில் ஒரு ஆண்டுக்கு தனிநபர் தேயிலை நுகர்வு 800 கிராம் ஆக உள்ளது. இது, பாகிஸ்தானில் ஒரு கிலோவாக உள்ளது.*

*20 கோடி கிலோ*

*சென்ற நிதி ஆண்டில் 20 கோடி கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டிலும் இதே அளவிற்கு ஏற்றுமதி மேற்கொள்ள இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில் இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி 19 கோடி கிலோவாக இருந்தது.*

*நடப்பு 2010 காலண்டர் ஆண்டில், நாட்டின் தேயிலை உற்பத்தி 100 கோடி கிலோவை எட்டும் என பானர்ஜி மேலும் தெரிவித்தார். சென்ற ஆண்டில் தேயிலை உற்பத்தி 97.90 கோடி கிலோவாகவும், முந்தைய 2008–ஆம் ஆண்டில் 98.10 கோடி கிலோவாகவும் இருந்தது. சென்ற ஆண்டில் உற்பத்தி 20 லட்சம் கிலோ*

குறைந்துள்ளது.
சென்ற 2009–ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி நம் நாட்டில் 1,692 பதிவு பெற்ற தேயிலை உற்பத்தியாளர்கள் உள்ளனர். 2,200 பதிவு பெற்ற ஏற்றுமதி நிறுவனங்களும், 5,848 பதிவு பெற்ற இறக்குமதியாளர்களும் உள்ளனர். ஒன்பது பிரதான தேயிலை ஏல மையங்களும் உள்ளன.
தேயிலை துறை
இந்திய தேயிலை உற்பத்தி துறை 172 ஆண்டுகள் பழமையானது ஆகும். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் இத்துறையின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவிற்கு உள்ளது. நம் நாட்டில் வடகிழக்கு மாநிலங்களிலும், தென் மாநிலங்களிலும் தேயிலை அதிக அளவில் உற்பத்தியாகிறது. அசாம், மேற்கு வங்காளம், தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்கள் தேயிலை உற்பத்தியில் முன்னிலையில் உள்ளன. நாட்டின் தேயிலை உற்பத்தியில் அசாம் மாநிலத்தின் பங்களிப்பு 50 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. கர்நாடகா, திரிபுரா, இமாச்சலபிரதேசம், உத்தராஞ்சல், அருணாச்சலபிரதேசம், மணிப்பூர், சிக்கிம், நாகாலாந்து, மேகாலயா, மிசோராம் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களிலும் தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது.